பக்கங்கள் 16+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 01 வியாழக்கிழமை 15.05.2025 | அதிர்வு 285

## மின்னல் தாக்கி ஒருவர் மரணம்!



அம்பாறை மாவட்டத்தின் தெஹியத்தகண்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஜயபுர பகுதியில் 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# மிரட்டுகின்றார் ஜனாதிபதி அநுர

## சுமந்திரன் கடும் சாடல்

“தங்களிடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் உள்ளது என்றும், தன்னிடம் நிறைவேற்று அதிகாரம் உள்ளது என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மிரட்டுகின்றார்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பதில் பொதுச்செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் குற்றஞ்சாட்டினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் 60 வருட நிறைவையொட்டி நேற்று புதன்கிழமை கொழும்பு - விஹாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றியிருந்தார்.


இந்த உரை குறித்து தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பதில் பொதுச்செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். 02▶

## விசேட அதிரடிப் படையினரின் வாகனம் மோதி ஒருவர் மரணம்

### ஓமந்தையில் துயரம்

(ந.லோகதயாளன்)

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் விசேட அதிரடிப் படையின் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.



இந்த விபத்தில் 32 வயதுடைய கண்ணதாசன் திவியன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

வீதியின் மறு திசைக்கு மாற முற்பட்ட மோட்டார் சைக்கிள மீது விசேட அதிரடிப் படையின் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதோடு வீதியின் அருகே நின்ற நபருடனும் விசேட அதிரடிப் படையின் வாகனம் மோதுண்டது.

இந்த விபத்தில் சிக்கிய விசேட 02▶

## இந்தியாவில் இருந்து படகில் வந்த நால்வர் உட்பட அறுவர் கைது!



(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து படகு வழியாக யாழ்ப்பாணம் வந்த நால்வர் உட்பட 6 பேர் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். 02▶

## புல்மோட்டை பாடசாலையில் மோதல்

# கழுத்து அறுக்கப்பட்டு உயிராபத்தான நிலையில் மாணவன் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி!

### காதல் விவகாரமே காரணம் என்று தெரிவிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

புல்மோட்டை பாடசாலை மாணவர்கள் இருவருக்கிடையில் இன்று காலை ஏற்பட்ட கைகலப்பில் ஒரு மாணவன் சவர அலகினால் கழுத்து அறுக்கப்பட்டு உயிராபத்தான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



சம்பவம் நடைபெற்ற பாடசாலையில் ஜி.சீ.ஈ. உயர்தரம் கற்கும் மாணவன் இந்தப் பாடசாலையில் சாதாரண தரத்தில் கற்கும் இன்னுமொரு மாணவனைத் தாக்கிக் கழுத்தை அறுத்துள்ளார்.

தாக்குதலில் ஈடுபட்ட மாணவன் உடனடியாக பிரதேசத்தில் இருந்து தப்பியோடிவிட்டார் என்றும், இந்தத் தாக்குதலுக்குக் காதல் விவகாரமே காரணம் என்றும் பாதிக்கப்பட்ட மாணவனின் வகுப்பு சக பாடிகள் கூறினர்.

படுகாயமடைந்த மாணவன் முதலில் புல்மோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.



## ரயில் மோதி பெண் மரணம்

(க.மகாதேவன்)

வலகப்பிட்டிய ரயில் நிலையத்துக்கு அருகாமையில் ரயில் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த மேற்படி பெண், ரயில் பாதையைக் கடக்க முற்பட்ட வேளையில் ரயில் மோதி மரணமடைந்துள்ளார்.

சிலாபம் – கொழும்பு வீதியாகச் சென்ற 'மந்தஹாமி' ரயில் மோதியே இந்தப் பெண் உயிரிழந்துள்ளார்.

# கொத்மலை, இறம்பொடை பஸ் விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவுத் திட்டம்!

### போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



கொத்மலை, இறம்பொடை பஸ் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு வழங்கும் ஒரு திட்டம் கொண்டுவரப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களை நேற்று (14) சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியினர் உட்பட பல தனிநபர்கள் இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ முன்வந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக விபத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு உதவிகள் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மின்னல் தாக்கி...**

மின்னல் தாக்கி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விஜயபுர, தமனேவெல பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே இந்தச் சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

மேற்படி நபர் வயலில் நெல் விதைக்கும் போது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தெஹியத்தகண்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**மிரட்டுகின்றார்...**

தனது எக்ஸ் பக்கத்தில் மேலும் குறிப்பிட்டுள்ள சுமந்திரன்,

"தங்களிடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருப்பதாகவும், தன்னிடம் நிறைவேற்று அதிகாரம் உள்ளதாகவும் ஜனாதிபதி மிரட்டுகின்றார். அதிகாரம் கெடுவிக்கும் முழுமையான அதிகாரம் முற்றிலும் கெடுவிக்கும். யாழ்ப்பாண மாநகர சபையில் 10:41 பெரும்பான்மை என்று சொல்லும்போது அவரது கணிதத் தகைமை வெளிப்படுகின்றது." – என்று தெரிவித்துள்ளார்.

**விசேட...**

அதிரடிப் படையின் வாகனம் விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்து தப்பிச் சென்றுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளின் சாரதி மற்றும் வீதியின் அருகே நின்றவர் ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் மோட்டார் சைக்கிளின் சாரதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இன்று இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**படகில் வந்த...**

இலங்கையில் இருந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்று மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்த நால்வரை வல்வெட்டித்துறையில் இருந்து சென்ற இருவர், படகில் ஏற்றி வந்த வேளை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து வருகை தந்த திருகோணமலை மற்றும் மன்னாரைச் சேர்ந்த நால்வரும், படகு ஓட்டிகள் இருவருமே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு ஆண், ஒரு பெண் மற்றும் இரண்டு சிறுமிகளே மண்டபம் அகதி முகாமில் இருந்து படகில் ஏற்றி வரப்பட்டுள்ளனர்.



# வவுனியா சபைகளில் ஆட்சி அமைப்பது குறித்து தமிழரசுக் கட்சி - சங்கு கூட்டணி கலந்துரையாடல்

(கி.வசந்தன்)

வவுனியா உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று வவுனியாவில் இடம்பெற்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் பின்னர் வவுனியா மாநகர சபை உட்பட ஏனைய சபைகளில் ஆட்சி அமைப்பதில் கட்சிகளுக்கு இடையில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் அந்த விடயம் தொடர்பாக தீர்க்கமான முடிவுகளை எடுக்கும் நோக்கத்துடன் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி மற்றும் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் இன்று ஒன்றுகூடினர்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் செந்தில்நாதன் மயூரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ப.சத்தியலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் முக்கியஸ்தர் க. சந்திரகுலசிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் க.துளசி மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.







# செம்மணியில் அகழ்வுப் பணிகள் ஆரம்பம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். அரியாலை, செம்மணி – சித்துப்பாத்தி மயானத்தில் மனிதச் எச்சங்கள் அவதானிக்கப்பட்ட பகுதிகளில் இன்று வியாழக்கிழமை முதல் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

செம்மணி – சித்துப்பாத்தி மயானத்தில் கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காகக் குழிகள் வெட்டப்பட்டபோது அதற்குள் மனித என்புச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி அப்பகுதியில் நீதிவான் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டார்.

அவ்வேளை, மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியை ஸ்கேன் ஆய்வுக்கு உட்படுத்தவும், தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும் உத்தர விடப்பட்டது.

அதன் தொடர்ச்சியாகவே, அங்கு அகழ்வாய்வுப் பணிகள் இன்று ஆரம்பிக்கப்பட்டன.

அங்கு இன்று அளவீட்டுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு, மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதிகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், அடுத்து வரும் நாட்களில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.











# கட்சிக்குள் இருந்த துரோகிகளால் பாலமுனை மண் தோற்கடிக்கப்பட்டது

## உதுமாலெப்பை எம்.பி. இப்படித் தெரிவிப்பு!



(அபு அலா)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் இருந்துகொண்டு பதவிகளை அனுபவித்த துரோகிகளே அட்டாளைச்சேனை, பாலமுனை ஆகிய பிரதேச இரு வட்டாரங்களும் தோற்பதற்கான காரணம் என்று அம்பாறை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.

உரம் போட்ட கரங்களுக்கு தரம் கொண்ட நன்றி தெரிவிக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பீச் ரிசோட்டில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கட்சிக்குள் இருந்துகொண்டு மாற்றுக் கட்சியினரிடம் கள்ளத்தனமாக தொடர்பை வைத்து, கடைசி நிமிடம்வரை கட்சியில் தேர்தல் கேட்பதாகக் கூறி கட்சியை ஏமாற்றினார்கள். அவ்வாறான துரோகிகள் இப்போது மக்கள் மத்தியில் வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், இரண்டு இராஜாங்க அமைச்சர்களும் இருந்து கொண்டு தங்களுக்கான தரகர்களையும் குழுக்களையும் உருவாக்கி கட்சியையும், கட்சியின் கட்டமைப்புக்களையும் சீர்குலைத்துள்ளார்கள் என்பதை இந்தத் தேர்தலின் மூலம் கண்டறிந்துள்ளோம்.

இன்று கட்சி சிறப்பாகப் புனரமைக்கப்பட்டுள்ளது. கடந்த தேர்தலில் யார் யாரெல்லாம் எமது வேட்பாளர்களை தோற்கடிப்பதற்கான பல திட்டங்களை முன்னெடுத்த போதிலும், நானும் தேர்தல் குழுவினரும் அந்தத் திட்டங்களை முறியடித்து வெற்றி கண்டுள்ளோம். இது எமது ஒற்றுமையின் பலனால் எமக்கும் எமது கட்சிக்கும் கிடைத்த வெற்றியின் வெளிப்பாடாகும்.

அட்டாளைச்சேனையில் கட்சிக்குள் இருந்து கட்சிக்கு எதிராக செயற்படுவதற்கு 28 நபர்களுக்கு ஒவ்வொரு மாதமும் சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது. தேர்தல் காலங்களில் மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டது. இதை வெளிப்படையாக இனம் கண்டுள்ளோம்.- என்றார்.

# 'ரஜ உப்பு' என்ற பெயரிலேயே வெளிவருகிறது ஆனையிறவு உப்பு

## ஆளும் தரப்பினர் மீது மக்கள் நம்பிக்கையீனம்

ஆனையிறவு உப்பு என்ற பெயரில் பாரம்பரியமாக தயாரிக்கப்பட்ட உப்பானது ரஜ உப்பு (Raja Salt) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட நிலையில் பல்வேறு தரப்பிலும் அதிருப்தி ஏற்பட்டது. இந்த செயற்பாட்டுக்கு பல்வேறு தரப்பினரும் தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்த நிலையில் மீண்டும் ஆனையிறவு உப்பு என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டதாக தேசிய மக்கள் சக்தி அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர்களான கணநாதன் இளங்குமரன், ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி உள்ளிட்ட ஆளும் தரப்பினர் தெரிவித்தனர்.

எனினும் ஆனையிறவு உப்பானது தற்போதும் கூட ரஜ உப்பு என்ற பெயரிலேயே விநியோகம் செய்யப்படுகின்ற விடயம் வெளிச்சத்துக்கு வந்




துள்ளது.

வலி. கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவு சங்கம் ஊடாக நியாயமான விலையில் உப்பு விநியோகம் இடம்பெறுவதாகவும், அது தனது வேண்டுகோள் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகிறது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார்.

அந்த உப்புப் பைகளை வலி. கிழக்கு வடபகுதி பல நோக்கு கூட்டுறவு சங்கம் தமது உத்தியோகபூர்வ மூகநூல் பக்கத்தில் பகிர்ந்துள்ளது. அதில் ரஜ உப்பு என்ற பெயரே காணப்படுகிறது.

இந்த விடயமானது ஆளும் தரப்பினர் மீது மக்களுக்கு மிகுந்த எதிர்ப்பையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், அமைச்சர்களும், ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து பொய்யுரைத்து வருகின்றனர் என்று மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை உப்பின் பெயர் ஆனையிறவு உப்பு என்று இன்னமும் மாற்றம் செய்யப்படவில்லை என்று ஆனையிறவு உப்பளத்தில் நேற்று (14) போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அநுரவின் சுயரூபம்

நீண்ட காலம் எதிர்க்கட்சி வரிசைகளில் இருந்த போது, அதிகார அத்துமீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்த அநுரகுமார திஸநாயக்க இப்போது தாம் நிறைவேற்றதிகார ஜனாதிபதியான பின்னர் தாமும் அதிகார மமதையில் அட்டகாசம் புரியும் மூன்றாந் தரத் தலைவர்தான் என்ற வகைக்குள் தம்மை நிலை நிறுத்தி, முன்னைய ஆட்சியாளர்கள் போல நிறைவேற்றதிகாரத்தை அத்துமீறல்களுக்குற் பயன்படுத்தத் தயாராகி வருகின்றார் என்றே தோன்றுகின்றது.

உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்கள் தொடர்பில் தங்களிடம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கின்றது என்ற வலிமையோடு அவர் விடுத்திருக்கும் எச்சரிக்கை, அவரும் அதிகார அத்துமீறல்களுக்கு - அடாவடித்தனங்களுக்கு - விதிவிலக்காக இருக்கப் போகின்றவர் அல்லர் என்பதை உறுதிப்படுத்தி இருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இருக்கின்றது என்பதற்காக எந்தச் சட்டத்தையும் கொண்டு வந்து கண்மூடித்தனமாக நிறைவேற்றக் கூடாது, நிறைவேற்றுவது தவறு என்று முன்னர் உபதேசம் செய்தவர் அவர்தான். இப்போது அதனையே அவர் செய்ய விழைகின்றார் என்பதுதான் நாட்டின் துரதிஷ்டம்.

அதிகார போதை எப்போதும் கண்ணை மறைக்கும். மதியைக் கெடுக்கும். அந்த நிலைக்குத்தான் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் சென்றிருக்கின்றார்.

ஜனநாயகம் என்பது ஒருவகையில் அட்சர கணித முறைமைதான். எண்ணிக்கைகளின் கணக்குத்தான். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்ற அநுரகுமார திஸநாயக்கவின் இப்போதைய மிரட்டல் கூட அந்த எண்ணிக்கைல் கணக்கில் கட்டப்பட்டதுதான். தனித்து அறுதிப் பெரும்பான்மை இல்லாத கட்டமைப்புகளில், தனித்து ஆகக்கூடிய எண்ணிக்கை கொண்டவர்களே கட்டாயம் ஆட்சி அமைக்க வேண்டும் என்பது ஜனநாயம் அல்ல. ஏனைய தரப்புகள் தங்களுக்குள் ஒன்றுபட்டு நிர்வாகத்தை அமைப்பதும் ஜனநாயகம்தான். அது மக்களின் ஆணைக்கு எதிரான முடிவல்ல. தனித்து ஒரு கட்சி கூடிய ஆசனங்களை பெற்றிருக்கின்றது என்பதற்காக - அது அறுதி பெரும்பான்மை பெறாத நிலையில் - அதற்கு மக்கள் நிர்வாகத்திற்கான ஆணையைத் தந்திருக்கிறார்கள் என்று அநுரகுமார திஸநாயக்க விதண்டாவாத அரசியல் தத்துவம் தத்துவம் பேச முயல்கின்றார்.

ஒரு சபையில் அறுதிப் பெரும்பான்மையை மக்கள் ஒரு தரப்புக்கு கொடுக்கவில்லை என்றால், அந்த சபையின் ஆணை மக்களால் தங்களுக்குத் தரப்பட்டிருப்பதாக அந்தத் தரப்பு கூறுவதுதான் ஜனநாயக விரோதம். அதனை நாடாளுமன்றத்தில் உள்ள பலத்தை பயன்படுத்தி - பிரயோகித்து - அச்சுறுத்தி - மக்கள் ஆணையாகக் காட்ட ஜனாதிபதி முயற்சிப்பது அதிகார துஷ்பிரயோகம் மாத்திரம் அல்ல, ஜனநாயக விரோத நடவடிக்கையும் கூட.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்ற வலிமையை வைத்துக்கொண்டு அதிகார துஷ்பிரயோகத்துக்கு ஜனாதிபதி தயாராகி விட்டார் என்பது தெளிவாகியுள்ளது.

இந்தப் பின்புலத்தில் உள்ளூராட்சி தேர்தலில் தமிழர் தாயகம் எடுத்த முடிவு சரியானது என்பதை அவரது நடவடிக்கை நிரூபிக்கின்றது.



# முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற மரதனோட்டப் போட்டி

**(பா.சதீசன்)**

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் 2025 ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவு மாவட்ட மட்டத்திலான மாபெரும் மரதனோட்டப் போட்டி இடம்பெற்றது.

முன்னாள் தேசிய மரதனோட்ட வீரர் கந்தசாமி பத்மநாதனின் நிதி அனுசரனையோடு வித்தியானந்தாக் கல்லூரி முன்பாக ஆண்களுக்கும், முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக பெண்களுக்கும் ஆரம்பிக்கப்பட்டு முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலயம் முன்பாகப் போட்டிகள் நிறைவடைந்திருந்தன.

போட்டிகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு வெற்றி கேடயங்களும், பணப் பரிசு, சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன.அத்தோடு விசேடமாகப் போட்டியை நிறைவு செய்த வீரர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கிவைக்கப்பட்டது.

நிகழ்வில் முல்லைத்தீவு கோட்டக் கல்வி பணிப்பாளர் திருக்குமரன், முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி சுதர்சன், முல்லைத்தீவு மாவட்ட உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ரி.டிலான், மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் இ.சகீதரசீலன், முல்லைத்தீவு பிரதேச செயலக பிரிவின் இளைஞர் சேவைகள் அதிகாரி சதீஸ்குமார், குமுழமுனை மகாவித்தியாலய அதிபர் ஜெயவீரசிங்கம், முன்னாள் விளையாட்டு வீரரும் ஓய்வு பெற்ற ஆசிரியருமான ஜோசப் யோகதாஸ், ஆசிரியர்கள், முன்னாள் தேசிய மரதனோட்ட வீரர் கந்தசாமி பத்மநாதன் (கனடா), புலம் பெயர் உறவு கந்தசாமி நுட்பராசா மற்றும் சமூக ஆர்வலர்கள், முல்லைத்தீவு மாவட்ட இளைஞர், யுவதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.











# சந்நிதியான் ஆச்சிரமத்தால் அம்பாறை மாவட்டத்தில் உதவி







தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம், அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில் ஆதார வைத் தியசாலைக்கும் பாடசாலை ஒன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபா செலவில் உதவித் திட்டங்களை வழங்கியது.

திருக்கோவில் அரசினர்ஆதார வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக ஒரு லட்சம் ரூபா பெறு மதியான 100 படுக்கை விரிப்புகள் வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டன.

அடுத்து திருக்கோவில் தாண்டியடி திருப்பதி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைய சிறுவர் பூங்கா கட்டுமானப் பணிக்கு ஒரு லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டது.

ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர் களுடன் நேரடியாகச் சென்று இந்த உதவித்திட்டங்களை வழங்கினர்.



# அட்டாளைச்சேனையில் திண்மக்கழிவு அகற்றப்படாமையால் மக்கள் விசனம்!










(அபு அலா)

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வாரம் ஒரு முறை மேற்கொள்ளப்பட்டு வரும் திண்மக்கழிவு அகற்றும் வேலைத் திட்டம் முறையாக மேற்கொள்ளப்படாமை குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கழிவகற்றும் வாகனங்கள் திண்மக்கழிவுகளை பெற்றுக்கொள்ள ஒழுங்கு முறையில் வருவதில்லை என்றும் மக்கள் விசனிக்கின்றனர்.

வீதிகளில் வைக்கப்படும் கழிவுகளைக் கட்டாக்காலி மாடுகள் மற்றும் நாய்கள் இழுத்து வீதி எங்கும் பரவுகின்றன. இதனால் வீதியெங்கும் துர்நாற்றம் வீசுவதுடன், பாதசாரிகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

அரச பொது விடுமுறை தினங்களில் கழிவகற்றும் வேலைத் திட்டம் இடம் பெறாவிட்டால், அது பற்றி பிரதேச சபை, பள்ளிவாசல்கள் ஊடாக அல்லது குறுந்தகவல் மூலம் பொதுமக்களுக்கு முறையான அறிவித்தல்களை வழங்க வேண்டும். ஆனால், பிரதேச சபை இந்த விடயத்தில் தொடர்ந்தும் அலட்சியமாக இருந்து வருகிறது என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வீதிகளிலுள்ள கழிவுகள் முறையாக அகற்றப்படுகின்றதா என்பது குறித்து பிரதேச சபையால் எந்த கண்காணிப்பு ஏற்பாடுகளும் இதுவரை செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையில் 50 இற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் ஊழியர்கள் இருந்தும் தமிழ் ஊழியர்கள் கடமைக்கு வருகை தராத நாள்களில் முஸ்லிம் தொழிலாளர்களைப் பயன்படுத்தி கழிவு சேகரிப்பு நடவடிக்கையை மேற்கொள்ள உரிய அதிகாரிகள் தயக்கம் காட்டுகின்றனர்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கழிவகற்றும் செயற்பாட்டு முறையில் தமிழ் தொழிலாளர்களுக்கொரு நியாயம், முஸ்லிம் தொழிலாளர்களுக்கொரு நியாயம் என்ற ரீதியில் வேலைகள் இடம்பெறுகின்றன. இதில் அநீதியான செயற்பாடுகளை அதிகாரிகள் செய்து வருகின்றனர் என்றும் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தமிழ், முஸ்லிம் தொழிலாளர்கள் எல்லோரும் சமமாக பார்க்கப்பட்டு, திண்மக்கழிவுகள் பெற்றுக்கொள்ளும் செயற்பாட்டை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இசற். ஏ.எம்.பைசல் மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி ஆகியோரிடம் அட்டாளைச்சேனை பிரதேச பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




# வீதியில் புரண்டு கார் விபத்து!

(தலவாக்கலை பி.கேதீஸ்)

நுவரெலியா ஹட்டன் பிரதான வீதியில் தலவாக்கலை லோகி மல்லியப்புச் சந்தியில் கார் ஒன்று வீதியில் புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து நேற்று (14) மாலை இடம்பெற்றுள்ளது.

நுவரெலியாவில் இருந்து தலவாக்கலை நோக்கி பயணித்த கார் ஒன்றே இவ்வாறு வீதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் காரின் சாரதி மற்றும் அதில் பயணம் செய்த ஒருவரும் காயங்களுக்குள்ளாகினர். இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.





# ஐ.நாவும் சர்வதேசமும் தடுக்கத் தவறிய ருவாண்டா - தமிழ் இனப்படுகொலை!





**- நவீனன்-**

ருவாண்டா இனப்படுகொலையை 1994 இல் தடுக்கத் தவறியமைக்கு காரணம் அதனைப்பற்றி மேற்குலக நாடுகள் அறியாமல் இருந்தது என்பதல்ல, மாறாக மேற்குல நாடுகளின் அரசியல் நிலைப்பாடுகளே காரணமாகும். இந்த நிலமையே 2009 இல் வன்னியில் தமிழ் மக்களின் மீதான இனப்படுகொலை அரங்கேறிய வேளையில் சர்வதேசம் மௌனம் காத்தது.

### ருவாண்டா- தமிழ் இனப்படுகொலை

உண்மையில் ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது சர்வதேச சக்திகளோ ருவாண்டா இனவழிப்பை நிறுத்தவில்லை. ருவாண்டா மக்களின் விடுதலை இயக்கமான ருவண்டா தேசிய முண்ணனியே (Rwandan Patriotic Front) அந்த இன அழிப்பை நிறுத்தியது என்பதே வரலாற்று உண்மையாகும்.

தமிழ் இன அழிப்புக்குச் சர்வதேச சக்திகள் பல உடந்தையாக இருந்தமையால், தமிழ் ஈழப் போராட்டம் மௌனித்திருக்க வேண்டிய சூழ் நிலைக்கு தள்ளப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழினப் படுகொலைக்கு உள்ளான ஈழத் தமிழர்கள் முள்ளிவாய்க்கால் இன அழிப்பை, ருவாண்டா இனப்படுகொலையுடன் ஒப்பிடுவது தவிர்க்க முடியாதது.

1994 இல் ருவாண்டா இன அழிப்பைத் தடுத்து நிறுத்தாதது போன்று தமிழ் இன அழிப்பையையும் தடுத்து நிறுத்தாமைக்குக் காரணம் தமிழினப் படுகொலையை அவர்கள் அறியாமல் இருந்தது என்பது அல்ல மாறாக அந்த நாடுகளின் அரசியல் நிலைப்பாடே காரணம் ஆகும்.

அத்துடன் இலங்கை தனது தமிழ் இன அழிப்புக்குப் “பயங்கரவாதத்துக்கு எதிரான போர்” என முலாம் பூசியபோது சர்வதேச சக்திகள் இந்தப் பொய்யை ஏற்றுக் கொண்டன. இலங்கையின் தமிழ் இன அழிப்புக்கு ஆயுதங்களையும் வழங்கியது. சர்வதேச சக்திகளின் இந் நடவடிக்கை தமிழ் இன அழிப்புக்கு அந்தச் சக்திகளும் உடந்தையாக இருந்தன.

### 1994 ருவாண்டாவில் கோரம்

1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதியில் இருந்து 1994 ஆம் ஆண்டு ஜுலை 15 ஆம் திகதி வரையில் 800,0000 இற்கும் மேற்பட்ட டூட்ஸி (வுரவளை) சிறுபான்மை இன மக்களை, ஹுட்டு (ரரவர) பெரும்பான்மையினம் கொன்றொழித் திருந்தது என்பதை உலகறியும்.

ருவாண்டாவில் தற்போது எவருமே இனம் பற்றி பேச சட்ட ரீதியாக தடை விதிக்கப்பட்டுள்ளது. இனம் பற்றி பேசினால் அது நிஜமான நல்லிணக்கம் உருவாவதற்கு தடையாகவே இருப்பதாக ருவாண்டா அரசு வாதிடுகிறது.

நீண்ட கால வறுமையின் பிடியிலிருந்து ருவாண்டா நாடு வேகமாக வெளிவந்துள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களில் ருவாண்டாவின் பொருளாதாரம் சராசரியாக ஒன்பது வீதம் என்ற அளவில் வளர்ந்துள்ளது. இது சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கு நிகரான ஒரு வளர்ச்சி ஆகும்.

அத்துடன் 1994 களில் இனப்படுகொலையில் ஈடுபட்ட குற்றவாளிகள் மீதான சட்ட நடவடிக்கை என்று எடுத்துக் கொண்டால், இருபது லட்சம் பேருக்கு எதிராக உள்ளூர் நீதிமன்றங்களிலும், கொலைவெறிக் கும்பல்களின் தலைவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் மீது அயல்நாடு தான்ஸானியாவிலும் வழக்கு விசாரணை நடந்துள்ளது.

### முள்ளிவாய்க்கால் மானுடப் பேரவலம்

ருவாண்டாவில் 1994 இல் நிகழ்ந்த படுகொலைகளைப் போல 2009 இல் முள்ளிவாய்க்காலில் பாரிய மானுடப் பேரவலம் நிகழ்ந்தது. முள்ளிவாய்க்கால் அதுவொரு காலப் பெருந்துயரம் என்றே வரலாற்றில் பதியப்படும்.

கொத்துக் கொத்தாய் கொன்றழிக்கப்பட்ட தமிழ் மக்களின் குருதி படிந்து சிவந்த நிலமே முள்ளிவாய்க்கால். பல ஆண்டுகளாக தம் இருப்புக்காய் இனத்தின் விடுதலைக்காய் போராடிய ஒரு இனக்கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் கொத்துக் குண்டுகளுக்கும் எறிகணைகளுக்கும் இரையாக் கப்பட்ட 2009 மே 18 நாளாகும்.

முள்ளிவாய்க்கால் மண்ணும் மே 18 ஆம் நாளில் ஈழத்தமிழர் வாழ்வில் இருந்து மறக்கவும் மன்னிக்கவும் முடியாத ஒன்றாய் இதனாலேயே தன்னை வரலாற்றில் நிலைநிறுத்திக் கொண்டது.

### இன அழிப்பின் முப்பதாவது ஆண்டு

கொடூரமான ருவாண்டா இனவழிப்பின் முப்பதாவது ஆண்டு நினைவு தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது. 1994ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதியில் இருந்து 1994 ஆம் ஆண்டு ஜுலை 15 ஆம் திகதி வரையில் 800,0000 இற்கும் மேற்பட்ட டூட்ஸி (Tutsi) இன மக்களை, ஹுட்டு (ரரவர) பெரும்பான்மையினம் கொன்றொழித்திருந்தது.

ருவாண்டா இன அழிப்பு நடந்து கொண்டிருந்த சமயத்தில், இவ் இன அழிப்பை சர்வதேச சமூகமானது குறிப்பாக பலம் வாய்ந்த சர்வதேச

தொடர்ச்சி ▼

# ஐ.நாவும் சர்வதேசமும் தடுக்கத் தவறிய ருவாண்டா - தமிழ் இனப்படுகொலை!

தொடர்ச்சி▲

சக்திகள் கவனத்தில் எடுக்கவில்லை. மேலும், படுகொலை இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் நடைபெற்றுக் கொண்டிருப்பது இனவழிப்பென ஏற்றுக் கொள்ள சர்வதேச சக்திகள் மறுத்திருந்தன.

நீண்ட காலத்துக்கு பின்னரே ருவாண்டாவில் நடைபெற்றுக் கொண்டிருப்பது இனவழிப்பு நடவடிக்கை என ஐ.நா. குறிப்பிட்டிருந்த போதும் இந்த நடவடிக்கைகள் இன அழிப்புக் குற்றத்தில் உள்ளடங்குபவை என கூறத் தயாராக இருக்கவில்லை.

**பழங்குடியின ருவாண்டா**

ருவாண்டா 26 ஆயிரம் சதுர கிலோ மீற்றர்கள் பரப்பளவு கொண்ட நாடாகும். இதன் மக்கள் பல்வேறு பழங்குடிக் குழுக்களைச் சார்ந்தவர்கள். ஆதியில் வந்தவர்கள் 'ட்வா' என்றும், பின்னர் வந்தவர்கள் இன்று பெரும்பான்மை மக்கள் என அறியப்படும் ஹுட்டு பிரிவைச் சார்ந்தவர்கள்.

1700 களில் எட்டு அரசுகளாக அங்கு உருவாகின. அதில் ஓர் அரசான டுட்ஸி நயிகின்யாவின் ஆட்சியில் தனிப் பெரும் அரசாக உருவெடுத்தது. அதன் முக்கிய மன்னனான கிகேலி ர்வாபுகிரி (Kigeli Rwabugiri) பல நிர்வாகச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

டுட்ஸி மக்கள் சமூகத்தின் மேற்படியில் அமர்த்தப்பட்டனர். ஹுட்டுக்கள் டுட்ஸி குழுத் தலைவர்களுக்கு வேலை செய்தனர்.

அப்போதிருந்து டுட்ஸிக்களுக்கும், ஹுட்டுகளுக்கும், சமூகப் பொருளாதார, அரசதிகாரப் பிரிவினைகள் ஆரம்பமாகின. அதன்பின் 1884 பெர்லின் மாநாட்டின் வழியாக, ருவாண்டா ஜேர்மனிக்கு அளிக்கப்பட்டது. ஜேர்மனி, உள்ளூர் அரசர் வழியாக ருவாண்டாவை ஆண்டுவந்தது.

**ருவாண்டா பெல்ஜிய ஆதிக்கத்தில்**

முதலாம் உலகப் போருக்குப் பின், ருவாண்டா பெல்ஜியத்தின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. ஜேர்மனியைப் போல் இல்லாமல், பெல்ஜியம் நேரடியான நிர்வாகத்தில் ஈடுபட்டது. ருவாண்டாவை நவீனப்படுத்தும் முயற்சிகள் ஆரம்பமாகின. அதில் ஓர் அங்கமாக, நிலச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, நிலம் தனியார்மயம் ஆக்கப்பட்டது.

இந்தச் சீர்திருத்தத்தில், பொருளாதாரத்தின் மேற்படியில் இருந்த டுட்ஸிகள் பயனுற்றார்கள்.

ஹுட்டுக்கள் தம் நிலங்களை குறைந்த இழப்பீட்டுத் தொகைக்கு இழந்து, டுட்ஸிகளின் கீழ் நிலமற்ற வேளாண் கூலிகள் ஆனார்கள். பெல்ஜியம் செய்த சீர்திருத்தம்தான் ஒரு பேரழிவை அறிவியல் பூர்வமாகச் செய்ய உதவியாக இருந்தது. அதுவே மக்களை ஹுட்டு, டுட்ஸி, ட்வா மற்றும் குடியேறிகள் எனப் பிரித்து அடையாள அட்டை கொடுத்தார்கள்.

மக்கள் பிறப்பின் அடிப்படையில் டுட்ஸி, ஹுட்டு, ட்வா எனப் பிரிக்கப்பட்டார்கள். அதற்கு முன்பு, ஒரு பணம் படைத்த ஹுட்டு, தன்னை டுட்ஸி என மாற்றிக் கொள்ளும் வாய்ப்பு இருந்தது. இதுபோன்ற வழிகள் அடையாள அட்டைக்குப் பின்பு நிரந்தரமாக அடைக்கப்பட்டன.


**1962 இல் சுதந்திரம்**

பின்னர், பெல்ஜியம் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க சபை ருவாண்டாவில் பிரபலமானது. இந்தச் சபை, மெல்ல மெல்ல ஹுட்டுக்களின் தரப்புக்காகப் பேசத் தொடங்கியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு, ஹுட்டுக்களின் மேம்பாடு பற்றிய குரல்கள் வலுக்கத் தொடங்கின.

1957இல், ஹுட்டு கோட்பாடு என்னும் முதல் ஆவணம் வெளியாயிற்று. இது புள்ளியியல் அடிப்படையில், அதிகாரம் டுட்ஸிகளிடம் இருந்து, ஹுட்டுகளுக்கு மாற வேண்டும் எனக் கோரியது.

1959இல் அடுத்த திருப்புமுனை. டொமினிக் ம்போனியுமுட்வா (Domnique Mbonyumutwa) என்னும் ஹுட்டு தலைவர், தலைநகர் கிகாலியில் தாக்கப்பட்டார். அவர் கொல்லப்பட்டார் என்ற தவறான தகவல் பரவ, ஹுட்டுக்கள், டுட்ஸிகளைக் கொல்லத் தொடங்கினர்.

டுட்ஸிகளும் பதில் தாக்குதல்களைத் தொடங்கினர். ருவாண்டப் புரட்சி என்னும் இந்தத் தகராறு ஆரம்பமானது. இந்தக் காலகட்டத்தில், பெல்ஜியர்கள், பெரும்பான்மை ஹுட்டுகளுக்கு ஆதரவாகச் செயல்படத் தொடங்கினர். 1960இல், டுட்ஸித் தலைவர்கள் மாற்றப்பட்டு, ஹுட்டுக்கள் அந்த இடங்களில் நிரப்பப்பட்டு, தேர்தல் நடத்




தப்பட்டது.

இதில், பெருவாரியாக ஹுட்டுக்கள் வென்று ஆட்சியமைத்தனர். 1962இல் ருவாண்டா, ஹுட்டுக்களின் தலைமையில் சுதந்திரம் பெற்றது.

**ருவாண்டா இனப்படுகொலை**

1959 இல் ருவாண்டாவின் டுட்ஸி மன்னராட்சி முறையை ஒழித்துவிட்டு ஹுட்டுக்கள் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தனர். டுட்ஸி இனத்தார் உகாண்டாவுக்கும் பிற அண்டை நாடுகளுக்கும் வெளியேறினர். அவர்கள் ஆர் பி எஃப் அதாவது ருவாண்டா தேசப்பற்று முன்னணி என்ற கிளர்ச்சிக் குழு ஒன்றை அமைத்து ருவாண்டாவுடன் சண்டையிட்டு வந்தனர்.

1990ல் அந்த நாட்டின் மீது படையெடுத்த

தொடர்ச்சி▼

# ஐ.நாவும் சர்வதேசமும் தடுக்கத் தவறிய ருவாண்டா – தமிழ் இனப்படுகொலை!

தொடர்ச்சி▲

னர். 1993 இல் ருவாண்டாவுக்கும் இவர்களுக்கிடையே சமாதான உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டிருந்தது. 1994 ஏப்ரல் 6 இல் ருவாண்டாவின் அதிபரான ஹுட்டு இனத்தைச் சேர்ந்த ஹப்யாரிமனா சென்ற விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. ஹுட்டு கடும்போக்காளர்கள், டூட்ஸி இனத்தாரை ஒட்டுமொத்தமாக அழித்துவிட வேண்டும் எனத் திட்டமிட்டு கொலைவெறியாட்டத்தில் இறங்கினர்.

**திட்டமிட்ட இன வெறியாட்டம்**

ருவாண்டா அரசுக்கு எதிரானவர்கள் யார் யார் என்று கவனமாக அடையாளம் காணப்பட்டு அவர்கள் எல்லாம் திட்டமிட்டு குடும்பத்தோடு கொன்று குவிக்கப்பட்டனர். டூட்ஸி இனத்தவரை அவரது அயல் வீட்டில் வாழ்ந்த ஹுட்டு இனத்தவரே கொன்ற அவலமும், டூட்ஸி மனைவியை அவருடைய ஹுட்டு கணவனே கொன்றது போன்ற கொடூரங்களும் அப்போது அரங்கேறின.

கொலைகளைத் தாண்டி டூட்ஸி இனப் பெண்கள் ஆயிரக் கணக்கானோர், பிடித்துச் செல்லப்பட்டு பாலியல் அடிமைகளாகவும் நடத்தப்பட்டனர். திட்டமிட்டு ஒருங்கிணைக்கப்பட்டு கொலைகள்



அரங்கேறின.

1994 ஆம் ஆண்டு ஏப்ரல் காலகட்டத்தில் ருவாண்டாவில் எட்டு லட்சம் பேர் கொன்று குவிக்கப்பட்டனர். இறந்தவர்கள் பெரும்பான்மையாக டூட்ஸி இனத்தவர். கொலை வெறியாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பெரும்பான்மையாக ஹுட்டு இனத்தவர் ஆவார்கள்.

ருவாண்டாவின் அப்போதைய சனத்தொகையில் 85 சதவீதம் பேர் ஹுட்டு இனத்தார் என்றாலும், அங்கு சிறுபான்மையாக வாழ்ந்துவந்த டூட்ஸி இனத்தாரின் கை வணிகத்திலும், பொருளாதாரத்திலும் மேலோங்கியிருந்தது என்பது உண்மையே.

**ருவண்டா தேசிய முன்னனி**

படுகொலையை இனவழிப்பென சர்வதேச சக்திகள் எற்க தயங்குவதற்கு காரணம் நடைபெற்றது இனப்படுகொலையென அங்கீகரித்தால் அதனைத் தடுக்க வேண்டிய சட்டக் கடப்பாடு இருப்பதே ஆகும். அந்த நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிகாக்கும் படையின் தலைவராகவிருந்த கொபி அனான் (Kofi Annan) ருவாண்டா இனப்படுகொலையை தடுக்கத் தவறியமைக்கு காரணம் அதனைப்பற்றி மேற்குலக நாடுகள் அறியாமல் இருந்தது என்பதல்ல, மாறாக மேற்குல நாடுகளின் அரசியல் நிலைப்பாடுகளே காரணமாகும்.

**ஐ.நா. கொலைகளை தடுக்கவில்லை**

அந்த நேரத்தில் ஐ.நா. அமைதிகாப்பு படைகளும் மற்றும் பெல்ஜியம் படைகளும் அவ்விடத்தில் இருந்தாலும், இந்த கொலைகளை தடுக்க வேண்டிய உத்தரவு அவர்களுக்கு சென்றிருக்கவில்லை.

ஹுட்டு அரசுக்கு நெருக்கமாக இருந்த பிரஞ்சு அரசு பாதுகாப்பு வலயம் ஒன்றை அமைத்தாலும் அதுவும் கொலைகளைத் தடுக்க போதிய முயற்சி எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரான்சும் கூட கொலைகளில் சம்பந்தப்பட்டிருந்ததாக ருவாண்டாவின் தற்போதைய ஜனாதிபதி குற்றம்சாட்டுகிறார். ஆனால் பிரான்ஸ் அரசு அதனை மறுக்கிறது.

பின்னர் டூட்ஸி இன கிளர்ட்ச்சிக் குழுவினர் வலுவாக அணிதிரண்டு ஹுட்டுக்களை ருவாண்டாவை விட்டு விரட்டி ஆட்சியைக் கைப்பற்றினர்.

இனக்கொலை வெறியாட்டம் முடிந்து அமைதி திரும்பிய பின்னர் ருவாண்டாவில் ஆர் பி எஃப் கிளர்ச்சிப் படையின் தலைவர் பால் கிகாமே அதிபராக வந்து, பொருளாதார ரீதியில் நாட்டை முன்னேற்றியுள்ளார்.

**கொத்துக் கொத்தாய் கொல்லப்பட்ட தமிழர்**

2008 இன் இறுதிப் பகுதியிலும், 2009 ஆரம்பத்திலும், ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை அரச படைத்துத துறையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் போர் நடைபெற்றது.

மேற்குலகின் உதவியுடன் அதி நவீன ஆயுதங்கள் இரக்கமே இல்லாது முள்ளிவாய்க்கால் மண் மீது வீசப்பட்டது. அண்டை நாடு முதல் ஐ.நா. சபை வரை வேடிக்கை பார்த்து நிற்க பேரினவாத அரசின் கொடூர வன்செயலால் பிஞ்சுக் குழந்தை முதல் வயதானவர்கள்வரை குரல்வளை நசிக்கப்பட்டும் உயிரோடு புதைக்கப்பட்டும் சித்திர வதைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் கொல்லப்பட்டிருந்தனர்.

தமிழீழ தனிநாடு விடுதலை கோரி 1956 இலிருந்து அகிம்சைப் போராட்டங்களிலும், பின்னர் 2009 வரை ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் கட்டம் முள்ளிவாய்க்காலில் பாரிய மனிதப் பேரழிவுடன் தமிழர்களின் ஈழப்போராட்டம் மௌனிக்கப்பட்டது.

இத்தனைக்கும் தமிழ் பேசும் மக்கள் கேட்டது, அவர்கள் நிலம் அவர்களுக்கு வேண்டும் என்பதேயாகும். இதை ஏற்க மறுத்த பேரினவாத சிங்கள அரசு தமிழ் மக்களை மேற்குலகின் துணையோடு, இரக்கமே இல்லாமல் முள்ளிவாய்க்காலில் அழித்தொழித்தது.

அன்றைய ருவாண்டா படுகொலைக்கும் பின்னர் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த கோரங்களுக்கும் சர்வதேசம் பொறுப்புக் கூற தவறியுள்ளது.

# நாட்டில் வீதி விபத்துகளைக் குறைக்க கடுமையான விதிகள் அவசியம் தேவை!

## பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு




நாட்டில் தற்போது நிலவும் வீதி விபத்துகளைக் குறைக்க கடுமையான விதிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளும் வலுப்படுத்தப்படும்.

தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பொலிஸ் அதிகாரிகள் முறையாக செயல்படுத்த வேண்டும்.

பொலிஸ் அதிகாரிகள் அந்த விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை செயல்படுத்து போனால் அது தொடர்பான வழக்குகளையும் நாம் விசாரிப்போம்.

கொத்மலை பஸ் விபத்து குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இரண்டு வாரங்களுக்குள் கிடைக்கும்.

இதேவேளை, விபத்துகள் அதிகரிப்பதைக் கருத்தில் கொண்டு, நீண்ட தூர பஸ் சேவைகளில், இரவு நேரங்களில் சிறப்பு சோதனைகள் மேற்கொள்ளுமாறு அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.- என்றார்.

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 38 பேர் கடற்படையினரால் கைது

இலங்கை கடற்படையினர் கடந்த ஏப்ரல் 21 முதல் 28 ஆம் திகதி வரை மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கைகளின் போது, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 38 பேர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடைக்காடு, புதுமாத்தளன், திருகோணமலை, கொக்கிளாய், சேப்பல் தீவு ஆகிய கடலோர மற்றும் கடல் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

38 சந்தேக நபர்களைக் கைது செய்ததுடன், 08 சட்டவிரோத வலைகள், 12 டிங்கி படகுகள் மற்றும் மின் விளக்கு உபகரணங்கள் என்பவற்றையும் கடற்படையினர் மீட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை, மீன்பிடி படகுகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களுடன் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய பகுதிக்கான கடற்தொழில் நீரியல் வளத் துறையினரிடம் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரண்டு வலம்புரிச் சங்குகளுடன் ஜாஎலவில் நான்கு பேர் கைது!



ஜாஎல நகரில், 10 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய தயாராக இருந்த இரண்டு வலம்புரி சங்குகளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எல்பிட்டிய, பதுகிரிய மற்றும் ஹம்பாந்தோட்டை பகுதிகளை சேர்ந்த 23 முதல் 26 வயதுக்குட்பட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜாஎல பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று புதன்கிழமை ஜாஎல நகரில் நடத்தப்பட்ட சோதனையின் போது இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஜாஎல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் அமெரிக்க தலையீடு; மீண்டும் ட்ரம்ப் வலியுறுத்தல்

இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் தனது தலையீடு இருந்தது என்று மீண்டும் வலியுறுத்திப் பேசியுள்ளார்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப். 'நண்பர்களே வாருங்கள் நாம் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வோம். கொஞ்சம் வர்த்தகம் செய்வோம். அணு ஆயுதங்களை விற்க வேண்டாம். நீங்கள் உருவாக்கும் அழகான பொருட்களை விற்பனை செய்வோம். இரண்டு நாடுகளிலும் சக்தி வாய்ந்த, வலிமையான, நல்ல தலைவர்கள் உள்ளனர் என்றேன்.' என்று தனது சமரசப் பேச்சு விவரத்தை அவர் பகிர்ந்துள்ளார்.



சவுதி அரேபியா இளவரசர் முகம்மது பின் சல்மான், டெஸ்லா சிஇஓ எலான் மஸ்க், அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மார்கோ ரூபியோ ஆகியோர் கலந்து கொண்ட அமெரிக்க சவுதி அரேபிய முதலீட்டாளர்கள் மன்றத்தில் உரையாற்றிய அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியதாவது: இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஒரு சாத்தியமான அணு ஆயுதப் போரை தவிர்த்து அமைதியை நிலைநாட்ட தனது நிர்வாகம் உதவியது. போர் நடந்திருந்தால் லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கலாம்.

துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் மற்றும் வெளியுறவுச் செயலாளர் ரூபியோ தலையிட்டு நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்தியாவும் பாகிஸ்தானும் உண்மையில் ஒத்துப்போயின. அவர்கள் இணக்கமாக இருக்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். நாம் அவர்களை இன்னும் கொஞ்சம் தூரம் அழைத்துச் செல்லலாம். அவர்கள் இருவரும் இணைந்து வெளியே சென்று இரவு உணவு சாப்பிடவேண்டும். அது நன்றாக இருக்கும் இல்லையா?

சில நாள்களுக்கு முன்பு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் அதிகரித்து வரும் பதற்றத்தைத் தணிக்க எனது நிர்வாகம் ஒரு வெற்றிகரமான முயற்சியை மேற்கொண்டது.

அதற்காக நான் பெரும் அளவில் வர்த்தகத்தை பயன்படுத்தினேன். நான் அவர்களிடம் சொன்னேன், "நண்பர்களே வாருங்கள் நாம் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வோம். கொஞ்சம் வர்த்தகம் செய்வோம். அணு ஆயுதங்களை விற்க வேண்டாம். நீங்கள் உருவாக்கும் அழகான பொருட்களை விற்பனை செய்வோம். இரண்டு நாடுகளிலும் சக்தி வாய்ந்த, வலிமையான, நல்ல தலைவர்கள் உள்ளனர் என்றேன்." இவ்வாறு ட்ரம்ப் பேசினார்.

பஹல்காமில் சுற்றுலா பயணிகள் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா நடத்திய ஆபரேஷன் சிந்தூர் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானும் எதிர்தாக்குதல் நடத்தியது. இதனால், இரண்டு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் ஏற்பட்டது. நான்கு நாட்கள் நடந்த தாக்குதல்களுக்கு பின்பு அமெரிக்கா மத்தியஸ்தம் செய்தது.

இதனிடையே இந்தியா - பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்தத்தில் மூன்றாம் தரப்பின் தலையீடு இல்லை என்றும், அது இரண்டு நாடுகளுக்கு இடையேயான நேரடி பேச்சுவார்த்தையால் ஏற்பட்டது என்று இந்தியா தெரிவித்திருந்தது. இந்தநிலையில் அமெரிக்க ஜனாதிபதி, இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் தனது தலையீடு இருந்தது என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சேதமடைந்த பாகிஸ்தான் விமானதள ஓடு பாதையின் படங்கள் வெளியீடு



பாகிஸ்தான் விமான தளங்களை குறிவைத்து இந்திய விமானப்படை கடந்த 10 மற்றும் 11ஆம் திகதிகளில் நடத்திய தாக்குதலில் சேதமடைந்த கட்டடங்கள் மற்றும் ஓடுதளங்களின் செயற்கைக்கோள் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்திய நகரங்கள் மற்றும் இராணுவ தளங்களை குறிவைத்து பாகிஸ்தான் நடத்திய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை இந்தியா வெற்றிகரமாக முறியடித்தது. இதற்கு பதிலடியாக இந்திய விமானப்படை கடந்த 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் பாகிஸ்தானின் ராவல்பிண்டியில் உள்ள நூர் கான் விமான தளம், சிந்து பகுதியில் உள்ள சுக்குர் விமானதளம், பாகிஸ்தானின் பஞ்சாப் பகுதியில் உள்ள ரகிம் யார் கான் விமான தளம் உட்பட இராணுவ மையங்கள் பலவற்றைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியது.

இதில் சேதமடைந்த விமானதள கட்டடங்கள் மற்றும் ஓடு பாதைகளின் செயற்கைகோள் படங்களை அமெரிக்காவின் ஏரோஸ்பேஸ் நிறுவனம் மேக்ஸர் டெக்னாலஜிஸ் வெளியிட்டுள்ளது. நூர் கான் விமான தளத்தில் ஒரு கட்டிடம் பலத்த சேதம் அடைந்துள்ளது. அதேபோல் சுக்குர் இராணுவ தளத்திலும் ஒரு கட்டடம் சேதம் அடைந்துள்ளது.

சர்கோதா நகரில் உள்ள முசாப் விமானப்படை தளம், வடக்கு சிந்து பகுதியில் உள்ள சாபாஷ் ஜேக்கோபாபாத் விமானப்படை தளம், வடக்கு தட்டா நகரில் உள்ள போலாரி விமானப்படை தளங்களும் சேதம் அடைந்தன. ஜேகோபாபாத் விமானப்படை தளத்தில் கட்டிடம் ஒன்று சேதம் அடைந்துள்ளது. முசாப் விமானப்படை தளத்தில் ஓடுபாதை சேதம் அடைந்துள்ளது.

இந்த தாக்குதல் குறித்து இந்திய விமானப்படை அதிகாரி விங் கொமாண்டர் வியோமிகா சிங் சில நாள்களுக்கு முன் அளித்த பேட்டியில் கூறினார். தற்போது அதற்கு ஆதாரமாக செயற்கைகோள் படங்கள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தான் இராணுவ மையங்களின் கட்டுப்பாட்டு மையம், பஸ்ரூர் மற்றும் சியால்கோட் விமானதளத்தில் உள்ள ரேடார் மையங்கள், ஆயுத கிடங்குகளும் சேதம் அடைந்துள்ளன.

# துருக்கியில் உக்ரைன்- ரஷ்யா இன்று நேரடி பேச்சுவார்த்தை

## ட்ரம்ப், புட்டின் பங்கெடுக்கமாட்டார்கள்

போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக, துருக்கியில் இன்று உக்ரைன்- ரஷ்யா நேரடி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன.

ரஷ்யா- உக்ரைன் இடையே போர் இடம்பெற்று வரும் நிலையில், அதை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இரு தரப்பிலும் தீவிர பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். இந்நிலையில், சில தினங்களுக்கு முன் இன்று நேரடி பேச்சுவார்த்தை நடத்தலாம் என உக்ரைனுக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் அழைப்பு விடுத்திருந்தார்.

இதையடுத்து மே 15 ஆம் திகதி வியாழக்கிழமை துருக்கியில் புடினுக்காக தான் காத்திருக்கப் போவதாகவும், தனிப்பட்ட முறையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும் ஜெலன்ஸ்கி தெரிவித்திருந்தார்.



இந்நிலையில் போர் நிறுத்தம் ஒப்பந்தம் தொடர்பாக, துருக்கியில் இன்று உக்ரைன்- ரஷ்யா நேரடி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன.

இதேவேளை, மூன்று ஆண்டுகளில் மொஸ்கோவிற்கும் கியேவிற்கும் இடையிலான முதல் நேரடி அமைதிப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் தெரிவித்துள்ளனர்.

அதற்கு பதிலாக கிரெம்ளின் அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் குழுவை அனுப்பியது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை எந்த முன்நிபந்தனைகளும் இல்லாமல் இஸ்தான்புல்லில் உக்ரைனுடன் நேரடி பேச்சுவார்த்தைகளை நடத்த புட்டின் முன்மொழிந்தார்.

புதன்கிழமை தாமதமாக, கிரெம்ளின் குழுவில் ஜனாதிபதி ஆலோசகர் விளாடிமிர் மெடின்ஸ்கி மற்றும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அலெக்சாண்டர் ஃபோமின் ஆகியோர் இடம் பெறுவார்கள் என்று கூறியது. ஆனால் புட்டினின் பெயர் பட்டியலில் இல்லை.

கிரெம்ளினின் தூதுக்குழு அறிவிப்புக்குப் பின்னர், மத்திய கிழக்கில் மூன்று நாடுகள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ட்ரம்ப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள மாட்டார் என்று ஒரு அமெரிக்க அதிகாரி தெரிவித்தார்.



# மெக்சிகோ விபத்தில் 21 பேர் உயிரிழப்பு!



மத்திய மெக்சிகோவில் நடந்த வீதி விபத்தில் குறைந்தது 21 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நேற்று புதன்கிழமை காலை பியூப்லா மாநிலத்தில் உள்ள குவாக்னோபாலன் மற்றும் ஓக்ஸாகா இடையேயான நெடுஞ்சாலையில் மூன்று வாகனங்கள் மோதிக்கொண்டதை அடுத்து இந்த விபத்து ஏற்பட்டதாக மெக்ஸிகன் அரசாங்க அதிகாரி சாமுவேல் அகுய்லர் பாலா தெரிவித்தார்.

சம்பவ இடத்திலேயே 18 பேர் இறந்தனர் எனவும் பின்னர் மூன்று பேர் மருத்துவமனையில் இறந்தனர் என்றும் அவர் உறுதிபடுத்தினார்.

மேலும் பலர் காயமடைந்து மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர் என அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

லொறி, பஸ் மற்றும் வான் ஆகிய வாகனங்களே விபத்தில் சிக்கியவை ஆகும்.

அண்மைய ஆண்டுகளில் மெக்சிகோவில் நெடுஞ்சாலைகளில் பல விபத்துக்கள் நடந்துள்ளன.

கடந்த பெப்ரவரியில் தெற்கு மெக்சிகோவில் உள்ள டபாஸ் கோவில் நடந்த பஸ் விபத்தில் பல பொது மக்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு
வியாழக்கிழமை 15/05/2025

## ஓஷாவாவில் துப்பாக்கி சூடு!

### இருவர் காயம்

கனடாவின், ஓஷாவாவில் புதன்கிழமை இரவு நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 02



# 2ஆவது முறை ட்ரம்புக்கு பிரித்தானியா அழைப்பு

## கனேடியர்கள் வருத்தம்

**இரண்டாவது முறை உத்தியோகபூர்வ விஜயமாக பிரித்தானியாவுக்கு வருமாறு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு பிரித்தானிய மன்னர் சார்ளஸ் அழைப்பு விடுத்துள்ளார்.**

**ஆனால், அது கனேடிய மக்களுக்குப் பிடிக்கவில்லை என கனடாவின் புதிய பிரதமரான மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

**கனடாவை அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக ஆக்க இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மிரட்டிக்கொண்டே இருக்கிறார்.**

கனடாவோ பிரித்தானிய மன்னர் சார்லசின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஒரு நாடு.

இப்படி ஒரு சூழலில், கனடாவின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் மிரட்டல் விடுத்துக்கொண்டிருக்கும் ட்ரம்புக்கு பிரித்தானியா வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள விடயம் கனேடியர்களுக்குப் பிடிக்கவில்லை என கனடா பிரதமரான மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ட்ரம்பின் மிரட்டல் குறித்து மன்னர் சார்லசோ பிரித்தானிய தரப்போ எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்ற கோபம் கனேடியர்களுக்கு உள்ளது.

இந்நிலையில், தங்களை ட்ரம்ப் மிரட்டிக்கொண்டிருக்கும் நேரத்தில் இரண்டாவது முறையாக பிரித்தானியாவுக்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள விடயம் கனேடியர்களை மேலும் கோபப்படுத்தியுள்ளது.

# குழந்தையை மாடியிலிருந்து தள்ளிவிட்ட பெண் கைது




கனடாவில் மாடியிலிருந்து குழந்தையொன்றை தள்ளிவிட்ட பெண்ணுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

டொரண்டோ நகர மையத்தில் உள்ள அடுக்குமாடியிலிருந்து குழந்தையை தள்ளியதாகக் கூறப்படும் 33 வயதுடைய பெண் மீது கொலை முயற்சி உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களை பொலிஸார் சுமத்தியுள்ளனர்.

கடந்த திங்கள் கிழமை காலை ப்ரொன்ட் ஸ்ட்ரீட் வெஸ்ட் Front Street West மற்றும் ஸ்பாடினா அவன்யூ Spadina Avenue அருகே உள்ள ஒரு கான்டோ கட்டடத்துக்கு அருகே தரையில் விழுந்த நிலையில் குழந்தை கிடப்பதாக பொலிஸாருக்கு அவசர அழைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் குழந்தை கடுமையாக காயமடைந்திருந்தாலும், உயிருக்கு ஆபத்தில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்துக்குப் பிறகு மேற்படி பெண்ணை, பொலிஸார் கைது செய்தனர். கொலைமுயற்சி தவிர, கடுமையான தாக்குதல், உயிருக்கு ஆபத்தான பதார்த்தம் கொடுத்தல், என பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

பெண்ணின் பெயர் பொலிஸாரால் வெளியிடப்படவில்லை. மேலும், குழந்தையுடனான உறவுமுறை குறித்து அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை.




## ஓஷாவாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் என டர்ஹாம் பிராந்திய பொலிஸ் தெரிவித்துள்ளது.

ஜான் ஸ்ட்ரீட் வெஸ்ட் மற்றும் சிம்கோ ஸ்ட்ரீட் சவுத் சாலைகள் சந்திக்கும் பகுதியில் இரவு 7 மணியளவில் இந்த சம்பவம் நடந்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ஒருவரை கண்டுபிடித்து, உடனடியாக டொரண்டோ பகுதியில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அவரின் காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை அல்ல என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மற்றொரு காயமடைந்த நபர் தன்னிச்சையாக மருத்துவமனைக்கு சென்றுள்ளார் எனவும் உயிருக்கு ஆபத்தில்லாத நிலையில் உள்ளார் என்றும் கூறப்படுகிறது.

காயமடைந்தவர்களில் ஒருவர் இளம் வயதுடையவர் என்றும் மற்றவர் வயதானவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக ஒருவரை பொலிஸ் கைது செய்துள்ளதாகவும், பொதுமக்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லையென்றும் அதிகாரிகள் உறுதிபடுத்தியுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு காரணமான சூழ்நிலைகள் தொடர்பான தகவல்கள் தற்போது வெளியாகவில்லை.




# எக்ஸ்பிரஸ் என்ட்ரி டிராவில் 511 பேருக்கு அழைப்பு

கனடாவின் IRCC மே 12, 2025 அன்று நடத்திய Provincial Nominee Program (PNP) அடிப்படையிலான எக்ஸ்பிரஸ் என்ட்ரி டிராவில் 511 வெளிநாட்டவர்களுக்கு நிரந்தர குடியுரிமைக்கான அழைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த டிராவில் குறைந்தபட்ச CRS (Comprehensive Ranking System) மதிப்பெண் 706-ஆக இருந்தது.

இது ஏப்ரல் 28, 2025 அன்று நடந்த முந்தைய PNP டிராவை விட 21 புள்ளிகள் குறைவாகும் (அப்போது 727 புள்ளிகள் இருந்தன).

IRCC-யின் தரவுகளின்படி, மார்ச் 4, 2025 அன்று இரவு 10:35:42 UTC-க்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்ட எக்ஸ்பிரஸ் என்ட்ரி ப்ரொஃபைல்கள் மட்டுமே tie-breaking விதிக்கு உட்பட்டு அழைப்பு பெற்றுள்ளன.

முக்கியமாக, கடந்த மார்ச் 25, 2025 அன்று வேலைவாய்ப்பு சான்றுகளுக்கான புள்ளிகள் CRS மதிப்பீட்டில் நீக்கப்பட்டன. இதன் மூலம் மேலாளர் நிலை வேலைகளுக்குப் பழைய 200 புள்ளிகளும், பிற வேலைகளுக்கான 50 புள்ளிகளும் தற்போது வழங்கப்படுவதில்லை.

PNP வாயிலாக, கனடாவின் மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் தங்களுக்கு தேவையான திறமையான வேட்பாளர்களை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு நாமினேஷன் சான்றிதழ் வழங்கி, அவர்களின் CRS மதிப்பெண்ணை உயர்த்தி, நிரந்தர குடியுரிமை பெற வாய்ப்பு அளிக்கின்றன.

இந்த குறைந்த CRS டிரா, மேலும் பல வெளிநாட்டவர்களுக்கு கனடா குடியுரிமை கனவுக்கு ஒரு படியாக அமைகிறது.




# யோர்க் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

யோர்க் பகுதியில் செவ்வாய்க் கிழமை பிற்பகல், லாறி மற்றும் மோட்டார் சைக்கிள் இடையிலான விபத்தில் வாகன் பகுதியை சேர்ந்த 25 வயது இளைஞர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து மாலை 3:40 மணியளவில், King Road மற்றும் 10th Concession Road அருகே இடம்பெற்றது.

இரண்டு வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதாக தகவல் வந்ததும், பொலிஸார் விரைந்து சம்பவ இடத்திற்குச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

விபத்தில் ஈடுபட்ட லொறியின் சாரதி சம்பவ இடத்திலேயே இருந்தார் என்றும், அவருக்கு எந்தவிதமான காயமும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணை நடந்து வருவதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.